Chapter X*XIII Code of Criminal Procedure)*

| | | | |
|---|---|---|---|
| *IN THE COURT OF`* | | I ADDITIONAL DISTRICT COURT TIRUNELVELI | |
| Calendar | | SC.No.31/2026 | |
| Miscellaneous | | | |
| Preliminary Register | | | |
| Sessions | | | |
| Deposition of Witness for | | Prosecution | P.W. 3 |
| | | Defence | |
| Name | | திரு.முத்துகிருஷ்ணன் | |
| Father's Name | : | திரு.பெரியசாமி | |
| Village | : | முன்னீர்பள்ளம் | |
| Taluk | : | திருநெல்வேலி | |
| Calling | : | அரசு தரப்பு சாட்சி (ஒப்புதல் வாக்குமூல சாட்சி) | |
| Age | : | 52 | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 21st day of July 2026.

(எதிரி ஆஜர் இல்லை. எதிரி தரப்பில் பிரிவு 355 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்படுகிறது.)

<u>முதல் விசாரணை</u> :–

நான் தற்போது முன்னீர்பள்ளத்தில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். சாட்சி சுடலை என்பவரை தெரியாது. இன்று நீதிமன்றத்தில் ஆஜராகாத எதிரியை தெரியாது. இந்த வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரிக்கவில்லை.

(அரசு வழக்கறிஞர் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரினார். ஆவணங்களை பரிசீலனை செய்த பிறகு அனுமதி வழங்கப்பட்டது)

குறுக்கு விசாரணை (அரசு தரப்பில்)

என்னை போலிசார் விசாரித்த போது கடந்த 28.09.2025 ம் தேதி 14.30 மணிக்கு மேலமுன்னீர்பள்ளம் செல்லாயி அம்மன்கோவில் அருகில் எதிரி சங்கரலிங்கம் என்ற சங்கரை சுடலை மற்றும் என் முன்னிலையில் கைது செய்து 15.00 மணிக்கு எந்த ஒரு துன்புறுத்துலும், ஆசைவார்த்தையும் இன்றி விசாரித்தபோது அவர் தன்னிச்சையாக ஒரு ஒப்புதல்வாக்குமூலம் கொடுத்தார் என்றும், அதில் நானும், சுடலையும் கையொப்பம் செய்தோம் என்றும், அந்த வாக்குமூலத்தின் அடிப்படையில் சம்பவத்திற்கு தான் வைத்திருந்த அரிவாளை புதுக்கிராமம் சுடுகாடு அருகே புதரில் மறைத்து வைத்திருப்பதாக சொன்னார் என்றும், மேற்படி தகவலின்அடிப்படையில் காவல் ஆய்வாளர் சம்பவ இடத்திற்கு சென்று அரிவாளை 16.15 மணிக்கு அத்தாட்சியில் கைப்பற்றினார் என்றும், அந்த அத்தாட்சியில் நாங்கள் இருவரும் சாட்சியாக கையொப்பம் செய்தோம்த என்று வாக்குமூலம் கொடுத்துவிட்டு தற்போது உண்மையை மறைத்து எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை

மறுவிசாரணை இல்லை.